# ‘மிக்ஜாம்’ பெரும் புயல் : பாதிப்பிலிருந்து மீண்ட மக்கள்!

# நிவாரணப் பணிகளை முனைப்புடன் நிறைவேற்றும் கழக அரசு!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (9.12.2023), பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் 6–வது மண்டலத்துக்குட்பட்ட வார்டு–76, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, லட்சுமி மஹாலில் உயர்க் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகைளை வழங்கினர். இந்நிகழ்வின் போது மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பகுதிச் செயலாளர் சொ.வேலு எம்.சி., கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



பம்மல் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உணவு பாதுகாப்புத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் நிவாரண உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (09.12.2023) தமிழ்நாடு முழுவதும் 3000 இடங்களில் நடைபெறும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைக்கும் விதமாக, கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை, கோதாமேடு ராஜ் திரையரங்கம் அருகில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (9.12.2023), சென்னை, பிராட்வே, டான் போஸ்கோ மேல்நிலைப் பள்ளியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதி. பெருநகர சென்னை மாநகராட்சி, 56வது வார்டுக்குட்பட்ட பி.ஆர். கார்டன், கச்சாலீஸ்வரர் கார்டன், ஆசிர்வாதபுரம், அப்பாராவ் தோட்டம், வள்ளுவர் நகர், கார்ப்பரேஷன் காலனி, செயின்ட் சேவியர் தெரு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 2,300 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகைகளை வழங்கினார். உடன் மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம் மற்றும் ராஜசேகர், ராஜா, பரத்குமார் ஆகியோர் இருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட நூம்பல் ஐ.சி.எல் வானகரம் ராஜீவ் நகர் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் நெய்வேலி என்எல்சி நிறுவனத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட ராட்சத மின் மோட்டார்களை வைத்து மழை நீரை அகற்றும் பணிகளை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீச்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் க.பிரபு கஜேந்திரன், ஆவடி மேயர் உதயகுமார், தலைமை தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் விமல்வர்ஷன், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், நகராட்சி ஆணையர் ஜகாங்கீர் பாஷா, பொறியாளர் குமார், சுகாதார அலுவலர் ஆல்பர்ட் அருள்ராஜ், உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் உள்ளனர்



திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக திருத்தணி சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு செல்லும் மலைப்பாதை சாலையின் பக்கவாட்டுப் பகுதி மற்றும் தடுப்பு சுவர் சுமார் 12 மீ அகலம், 8 மீ உயரத்திற்கு சேதம் அடைந்துள்ளதைத் தொடர்ந்து, அப்பகுதியை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிப்படைந்த பகுதியை விரைவில் சரி செய்து, பக்தர்களுக்கு சீரான சாலை போக்குவரத்தை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர் , தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, வருவாய் கோட்டாட்சியர் க.தீபா, அறநிலையத்துறை இணை ஆணையர் ரமணி. நெடுஞ்சாலைத்துறை உதவி இயக்குநர் அன்பரசு, வட்டாட்சியர் மதன், நகரச் செயலாளர் வி.வினோத்குமார், உள்பட அறங்காவலர் குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (09.12.2023) பெரம்பூர், 44வது வார்டு, முனியப்பன் தெருவில் உள்ள நிவாரண முகாம்களில் பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். உடன் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஆர்.டி.சேகர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.



திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட மிக்ஜாம் புயலின் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பணிகளை மேற்கொள்ள திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் முன்னிலையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ் குமார் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் தொகுதி முழுவதும் மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய பொருட்களையும் உணவு குடிநீர் மூன்று வேலையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மழை நீர் வடிய தேவையான அனைத்துப் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முன்னதாக கொசஸ்தலை ஆற்றின் ஒரு பகுதி பக்கிங் காம் கால்வாயை நேரில் சென்று ஆய்வு செய்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். இந்நிகழ்வில் 5வது வட்ட செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான கே.பி.சொக்கலிங்கம் உடன் இருந்தார்.